உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



# திருமுறை

## இசை வழிபாடு

27-04-2013, 28-04-2013 சனி, ஞாயிறு



## பன்னிருதிருமுறை ஆய்வு மையம்

### கற்பகம் பல்கலைக்கழகம்

ஈச்சநாரி, கோவை 641 021





அன்புடையீர் வணக்கம்,



விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கில்நன் மலர்தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில, கீதம் சொன்னார்க் கடிகள்தாம் அருளுமாறே - திருநாவுக்கரசர்





இறைவனை அடைவதற்குரிய பல வழிகளுள் மிகவும் எளியதும், எல்லோராலும் பின்பற்றக்கூடியதும் ஆகிய ஒன்றுதான் இறைவனைப் பாடி வழிபடுவது. இசைத்தமிழ் / தமிழிசை மிகப்பழமையானது. சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்றுக் காதையில் தமிழிசையின் நுட்பங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பழந்தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே பாணரும், பாடினியரும் கையாண்ட பண்கள் மொத்தம் 11991 என்றும், இவையே ஆதியிசை என்றும், இந்தியத் திருநாட்டில் உள்ள எல்லா இசைகளையும்விட இவை பழமையானவை என்றும் இசை நூலாசிரியர்கள் விரித்து எழுதியுள்ளனர். அந்தப் பண்களே பின்னாளில் கர்நாடக இசையில் இராகங்கள் ஆயின என்பது வரலாறு. மறைந்து போக எஞ்சியிருந்த தமிழ்ப்பண்களைத் தேவார முதலிகளும் ஏனைய திருமுறை ஆசிரியர்களும் காத்து வளர்த்தனர். அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனை இசைத்தமிழால் பாடி வழிபட்டார்கள். நம்மைப் போன்றோரையும் அந்நெறியில் ஈடுபடுத்தியுள்ளார்கள். பண்ணிடைத் தமிழாகவும், பழத்திடைச் சுவையாகவும் இருந்த பரம்பொருளை இசையில் வணங்க வழிகாட்டியவர்களுள் முதல்வரான திருஞானசம்பந்தர்;

"நல்லிசையாளன் புல்லிசைகேளா நற்றமிழ் ஞானசம்பந்தன்" என்று தம்மைக் கீழ்க்கண்ட பந்தணைநல்லூர் தேவாரத் திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்பின் மூலம் அறிமுகம் செய்துகொள்கிறார்.

"கல்லிசை பூணக்கலையொலி யோவாக் கழுமல முதுபதி தன்னில்
நல்லிசையாளன் புல்லிசை கேளா நற்றமிழ் ஞானசம்பந்தன்
பல்லிசை பகுவாய்ப் படுதலையேந்தி மேவிய பந்தணைநல்லூர்
சொல்லிய பாடல் பத்தும் வல்லவர்மேல் தொல்வினை சூழகிலாவே". இவ்வரிய பாடலை பூபாள இராகமாம் புறநீர்மைப் பண்ணில் பாடுவதால் அதிகாலையில் அவர் பந்தணைநல்லூர் இறைவனைத் தொழுது வணங்கினார் என்று தெரிந்து கொள்ளலாம்.

யாழ்முரியுடன் சேர்ந்து 23 பண்களில் 384 பதிகங்களில் 4158 பாடல்களைப் பண்ணிசையோடுபாடி தமிழிசையை / இசைத்தமிழை தெய்வ இசைத் தமிழாக மாற்றி அதன் மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். பஞ்சபூதங்களை ஆட்கொள்ளும் ஆற்றலும், இறந்தவர்களை எழுப்பும் திறனும், எந்த நோயையும் எதிர்கொண்டு நீக்கும் வல்லமையும், தீயசக்திகளை எதிர்கொள்ளும் ஆற்றலும் பண்ணிசைப்பாடல்களுக்கு உண்டு என்று நிரூபித்தவர் திருஞானசம்பந்தர். இவருக்குத் தாளமும், பக்கவாத்தியமும் தெய்வ அருளால் யாழ்ப்பாணர் போன்றவர்களால் அமைய தமிழிசை ஊர் தோறும் சென்று பரவியது. தாள அமைப்புக்கென்றே யாழ் முரி, திருத்தாளச்சதி என்ற இரண்டு தனிப்பதிகங்களைப் பாடியுள்ளார். இந்தளப் பண்ணில் மிக அதிகமாக 39 பதிகங்களைப் பாடிப் பரவியுள்ளார். சுருங்கச் சொல்லின் சம்பந்தர் தமது அவதார நோக்கங்களைத் தமிழிசையில் சாதித்தார் என்று சொல்லலாம்.

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன், தமிழோடிசைபாடல் மறந்தறியேன்" என்ற பாடல் அப்பர் சுவாமிகளுக்கு இசைப்பாடல்களிலிருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

10 பண்களில், 21 பதிகங்களில், 217 பாடல்களாக நான்காம் திருமுறையில் பாடி மகிழ்கின்றார். நான்காம் திருமுறையில் ஏனைய 58 பதிகங்கள் திருநேரிசைகளாகவும், 34 பதிகங்கள் திருவிருத்தமாகவும், ஐந்தாம் திருமுறையில் 100 பதிகங்கள் திருக்குறுந்தொகையாகவும், ஆறாம் திருமுறையில் 99 பதிகங்கள் திருத்தாண்டக அமைப்பாகவும் அமைத்து மொத்தம் 312 பதிகங்களில் 3066 பாடல்களை அருளியுள்ளார்.

பல்லவி - அனுபல்லவி - சரணம் என்ற மூன்று முழு உறுப்புகளையும் பூரணமாய்ப் பெற்ற ஒரு கீர்த்தனைக்குச் சமமான இசையமைப்பைத் திருவங்கமாலை என்ற சாதாரிப்பண்ணில் அமைந்த பதிகத்தின் மூலம் நான்காம் திருமுறையிலே அப்பரடிகள் பதிவு செய்துள்ளார்கள். "தலையே நீ வணங்காய்" என்று தொடங்கும் இப்பதிகம் 12 பாடல்களை உடையது. இவற்றில் 6 பாடல்கள் பல்லவி - அனுபல்லவி - சரணம் என்ற அமைப்பிலும் மற்ற 6 பாடல்கள் பல்லவி - சரணம் என்ற அமைப்பிலும் உள்ளன.

பல்லவி - அனுபல்லவி - சரணம்

1. பல்லவி : கண்கள் காண்மின்களோ
   அனுபல்லவி : கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னைக் (கண்கள்)
   சரணம் : எண் தோள் வீசி நின்றாடும் பிரான்தன்னைக் (கண்கள்)

பல்லவிக்கும் அனுபல்லவிக்கும் மோனை அமைந்திருப்பதும், பல்லவிக்கும், சரணத்துக்கும் எதுகை அமைந்திருப்பதையும் பார்த்து வியக்க வேண்டியுள்ளது.
மூக்கு, நெஞ்சு, கை, உற்றார், இறுமாந்து என்று தொடங்கும் மற்ற ஐந்துபாடல்களும் பல்லவி - அனுபல்லவி - சரணம் தொடர்புடையன.

2. பல்லவி - சரணம்

பல்லவி : தலையே நீ வணங்காய்

சரணம் : தலைமாலை தலைக்கணிந்து

தலையாலே பலிதேருந் தலைவனைத் (தலையே)

செவி, வாய், ஆக்கை, கால், தேடி என்று தொடங்கும் மற்ற ஐந்து பாடல்களும் பல்லவி - சரணம் என்றே முடியும் முடிபுள்ளன.

பிற்காலக் கீர்த்தனைகளுக்கு இவையெல்லாம் முன்னோடிகள்

இசைஞானியின் புதல்வரான சுந்தரர் இசை ஞானியாகவே வாழ்ந்து தாயின் பெயர்க்காரணத்தை நிரூபித்தார்.

நம்பி ஆரூரின் தேவாரத்தில் ஒரு சிறப்பான இசைச்செய்தி கிடைக்கிறது. அது; இறைவன் திருஞானசம்பந்தருக்கு உலகத்தில் எல்லோரும் காணுமாறு தாளம் அருளினான் என்பதும், அவர் தாளமிட்டுப் பாடல்பாடி உலகில் இசையில் இறைவன் புகழாகிய தமிழைப் பரப்பினார் என்பதுமாகும்.

"நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும் ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக்கிரங்கும் தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும் அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே"

திருவீழிமிழலையில் அப்பரும், சம்பந்தரும் இறைவனை வழிபட வந்தபோது பஞ்சம் ஏற்பட - பசிப்பிணியை ஆற்றும் பொருட்டு வீழிநாதன் பஞ்சம் தீரும் வரை காசு நல்கிய செய்தியை ;

"இருந்து நீர் தமிழோடு இசை கேட்கும் இச்சையில் காசு நித்தம் நல்கினீர்
அருந்தண் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே" என்று நயம்படச் சொல்கிறார் திருஞானசம்பந்தர்.

17 பண்களில் 100 பதிகங்களைப் பாடி 1026 பாடல்களைப் பண்ணிசையோடு அருளிச் செய்துள்ளார் சுந்தரர். செந்துருத்திப் பண்ணில் இவர் மட்டுமே பாடியுள்ளார். தக்கேசிப் பண்ணில் மிக அதிகமாக 17 பதிகங்களைப் பாடியுள்ளார்.

"இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்" என்று திருப்பள்ளி எழுச்சியில் பாடி மாணிக்கவாசகர் இசையின் முக்கியத்துவத்தைக் கூறுகிறார். யாழிலிருந்து வளர்ந்த வீணையைப்பற்றி சுவாமிகள் பல இடங்களில் சொல்கிறார். பொதுவாக திருவாசகத்தை ஓதுவார்கள் மோகன இராகத்தில் பாடுவார்கள். ஆனால் ஒரு சில ஓதுவார்கள் கீழ்க்காணும் இராகங்களில் சில பதிகங்களைப் பாடுவதை மரபாகக் கொண்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| திருப்பள்ளியெழுச்சி | - | பூபாளம் |
| திருப்பொன்னூசல் | - | ஆனந்த பைரவி / நீலாம்பரி |
| திருச்சாழல் | - | ஆனந்த பைரவி; ஆரபி |
| திருக்கழுக்குன்றப்பதிகம் | - | தோடி |
| திருப்படையாட்சி | - | ஆனந்த பைரவி |
| சிவபுராணமும் மற்ற மூன்று அகவல்களும் | - | சங்கராபரணம் |





திருவாசகத்தில் "பண்" பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை.

அருணகிரிநாதர் இசைத்தமிழுக்குச் செய்துள்ள பேருபகாரத்தை எவ்விதத்திலும் அளவிட்டுச் சொல்லமுடியாது. சிலப்பதிகாரக் காலம், திருமுறைப்பாசுர காலம், திருவிசைப்பா காலம், பெரியபுராணக் காலம் என்பவற்றை அடுத்துப் பின்வந்த முத்துத்தாண்டவர் காலமாகிய கீர்த்தனா காலத்துக்கு முந்திய காலத்தில் சுமார் 14ஆம் நூற்றாண்டில் இசைவானில் அருளொளிவிட்டு ஒரு நட்சத்திரமாக விளங்கியவர். தமிழில் தாளத்தைக் கூறுகின்ற அனேக இலக்கண நூல்கள் உள்ளன. இருந்தும் இவற்றுக்கெல்லாம் உரிய இலக்கியங்கள் மிகவும் அருகியே காணப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலையில் அருணகிரிநாதர் தமது திருப்புகழ் பாடல்களால் கற்பனையும் செய்யமுடியாத கணக்கிறந்த தாளவகைகளையும், சிறப்பான பல இராகங்களையும், இசைக்கருவிகளையும் குறிப்பிடுகின்றார். தாளங்களின் மாத்திரைகளைக் கூட்டியும் குறைத்தும், இணைத்தும் தாளப்பெருக்கம் செய்யலாம் என்று இலக்கணம் வகுத்த இலக்கண ஆசிரியர்கள் அவற்றுக்கு இலக்கியங்காட்ட வகையறியாது திகைத்தார்கள். அத்திகைப்பெல்லாம் நீங்கும்படியாகக் கற்பனைக்கும் எட்டாத தாள வின்னியாசங்கள் அமைந்த திருப்புகழ் பாடலை அவர் பாடித் தாள உலகையே தாங்கி நிற்கின்ற பெருந்தூணாக விளங்குகின்றார் அருணகிரிநாதர். அருணகிரிநாதருடைய தாளம், தாள ஆராய்ச்சி எல்லையில்லாதது. அது பக்திக் கருவூலமாக இருப்பது போலவே இசைக்கருவூலமாகவும் உள்ளது. இப்படிப்பட்ட அருளாளர்கள் நினைத்த காரியங்களை / செயல்களை நினைத்த அளவிலே முடிக்க உறுதுணையாக இருந்த இசைப்பாடல்களை நாமெல்லாம் அனுபவிக்க வேண்டுமென சிவபரம்பொருள் திருவருள் கொள்ளக் கீழ்க்கண்ட நிகழ்ச்சிநிரல்படி திருமுறை இசைவிழா நடைபெற உள்ளது.

அன்பர்கள் பங்குபெற்று உய்தி பெற அழைக்கும் அன்பன்,

**இராச.வசந்தகுமார்**

வேந்தர், கற்பகம் பல்கலைக்கழகம்.

திருச்சிற்றம்பலம்

# நிகழ்ச்சி நிரல்

| பாடகர்கள் | | | | | | | | திரு.சொ.சிவக்குமார்,<br>மயிலாடுதுறை | | | திரு.அ.பாலசுப்பிரமணியம்,<br>தேவார இசைக்கல்வி ஆசிரியர், இராமநாதபுரம் | | | | திரு.தி.சுரேஷ் சிவம்<br>மதுரை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 27.04.2013 சனி காலை 10:00 மணி முதல் 01:00 மணி வரை | | | 27.04.2013 சனி மாலை 02:00 மணி முதல் 05:00 மணி வரை | | | | 28.04.2010 ஞாயிறு காலை 09:30 மணி முதல் 12:30 மணி வரை | | | |
| பண் விபரங்கள் | | | | | | | | திருஞானசம்பந்தர் - திருமுறை 1, 2, 3 | | | திருநாவுக்கரசர் - திருமுறை 4 | | | | சுந்தரர் - திருமுறை 7 | | | |
| வ. எண் | பண்கள் | உகந்த காலம் | இன்றைய ராகம் | தன்மை | திருமுறை எண் | மெய்ப்பாடு | பதிகங்கள் | தலம் | பாடல் தொடக்கம் | அருஞ்செயல்கள் / அற்புதப் பதிகங்கள் / மகுடப் பாடல்கள் | தலம் | பதிகங்கள் | பதிகம்/பாடல் முதல்வரி | அற்புதம்/ அருஞ்செயல் | தலம் | பதிகம்/பாடல் முதல்வரி | பதிகங்கள் | அற்புதம்/ அருஞ்செயல் /மகுடம் பாடல்கள் |
| 1. | புறநீர்மை | கா.6-7.15 | பூபாளம் | மென்மை | 3 | உவகை<br>மருட்கை | 6 | திருஆலவாய் | மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை | சைவசமயத்தை நிலை நிறுத்திய அரசியர், அமைச்சரைப் புகழ்தல் | - | | - | - | திருவாரூர் | அந்தியும் நண்பகலும் | 3 | காஞ்சியில் கண் பெற்றபிறகு ஆரூரை எண்ணிப் பாடியது |
| 2. | காந்தாரம் | 7.15-8.30 | நவரோசு | - | 2 | பெருமிதம் | 29 | திருஆலவாய்<br>கடவூர் | மந்திரமாவது நீறு<br>பாசமான களைவார் | பாண்டியன் வெப்பு நோய் நீக்கிய அற்புதம் | 1. திருவதிகை<br>2.திருவையாறு | 6 | 1.சுண்ணவெண்சந்தன<br>2.மாதர்பிறைக் கண்ணியானை | 1.கொல்லவந்த களிறு கும்பிட்டு மீண்டது<br>2.கயிலைக்காட்சி பெற்றது | திருவாரூர் | கரையுங் கடலும் மலையுங் | 5 | இறைவனின் பெருமைகளைப் பாடியது |
| 3. | பியந்தைக் காந்தாரம் | 7.15-8.30 | நவரோசு | மென்மை | 2 | மருட்கை | 14 | திருநனிப்பள்ளி<br>நெல்வாயில் அரத்துறை<br>நாரையூர் | காரைகள் கூகை முல்லை<br>எந்தைஈசன் எம்பெருமான்<br>உரையினில் வந்த பாவம் | பாலை நிலம் நெய்தலான அற்புதம் | பொது | 1 | 1. சிவனெனும் ஓசை<br>2.புதுவிரிபொன் | நேர்பட நின்று அறைகூவும் திருப்பதிகம் | திருவாஞ்சியம் | பொருவனார் புரிநூலன் | 1 | இறைவனின் பெருமைகளைப் பாடியது |
| 4. | கௌசிகம் | 8.30-9.45 | பைரவி | வன்மை | 3 | அவலம்<br>மருட்கை<br>உவகை | 14 | திருஆலவாய் | செய்யனே திருஆலவாய் | பாண்டியனுக்கு வெப்பு நோய் தோற்றிய பதிகம் | 1. திருவையாறு<br>2. பாதிரிப்புலியூர் | 2 | 1. சிந்திப்பரியன<br>2. கருவாய்க்கிடந்துன் | 1. ஐயாற்றின் சிறப்புகள்<br>2.கரையேற்றிய தோன்றாத்துணைக்கு சார்த்திய வண்டமிழ் மாலை | திருச்சோற்றுத்துறை | அழல்நீர் ஒழுகி | 1 | இறைவனின் பெருமைகளைப் பாடியது |
| 5. | இந்தளம் | 9.45-11.00 | நாதநாமக்ரியா மாயாமாளவ | வன்மை | 2 | பெருமிதம்<br>மருட்கை | 39 | திருமறைக்காடு<br>திருமருகல் | 1. சதுரம் மறைதான் துதிசெய்து<br>2.சடையாய் எனுமால் | நாவரசர் பாடித் திறந்த கோயிற்கதவு மூடிய பதிகம் அரவின் விடம்தீர்த்த பதிகம் | 1.பொது<br>2.திருவாரூர் அரநெறி | 3 | 1. ஒன்று கொலாம்<br>2.எத்தீ புகினும் | அப்பூதியடிகள் மகன் விடம் தீர்த்தது | 1. திருவெண்ணெய் நல்லூர்<br>2.திருவஞ்சைக்களம்<br>3. திருவாரூர் | பித்தா பிறைசூடி ஊனாய்உயி ரானாய்<br>தலைக்குத் தலைமாலை<br>இறைகளோ டிசைந்த | 12 | தடுத்தாட் கொண்ட பின் பாடியது |
| 6. | தக்கேசி | 11.00-12.15 | காம்போதி | - | 1 | அச்சம்<br>உவகை | 12 | திருவண்ணாமலை<br>பழனம் | பூவார் மலர் கொண்டு<br>வேதமோதி | | - | | - | - | 1.திருவொற்றியூர்<br>2.திருப்புன்கூர்<br>3. திருவாரூர்<br>4. திருக்கச்சிஏகம்பம் | 1.அழுக்கு மெய்கொடு<br>2.அந்தணாளன் உன்<br>3.பொன்னும் மெய்ப்பொருளும்<br>4.ஆலந் தானுகந் தமுது | 17 | ஒற்றியூரில் கண்கள் இழந்த பிறகு பாடியது.<br>ஏயர்கோன் கலிக்காமரை எழுப்பியபிறகு பாடியது |
| 7. | நட்டராகம் | 12.15-1.30 | பந்துவராளி | | 2 | அவலம்<br>அச்சம்<br>உவகை | 16 | திருவலஞ்சுழி<br>திருத்துருத்தி | என்ன புண்ணியம் செய்தனை<br>துறக்குமா சொலப்படாய் | அகச்சான்று | - | | - | - | 1. திருக்கோளிலி<br>2. திருகுருகாவூர் வெள்ளடை<br>3. திருமழபாடி | 1. நீளநினைந்தடியேன்<br>2. பண்ணிடைத் தமிழ்<br>3. பொன்னார் மேனியனே | 14 | 1.குண்டையூர் நெல்லை ஆரூரில் சேர்த்த பதிகம்<br>2.தண்ணீரும் பொதிச்சோறும் பெற்றுப் பாடியது<br>3. இறைவன் கனவில் தோன்றியபின் பாடியது |
| 8. | சாதாரி | 12.15-1.30 | பந்துவராளி | வன்மை | 3 | உவகை<br>மருட்சை<br>பெருமிதம் | 33 | திருநள்ளாறு<br>வைகாவூர் | தளிரிளவளர் ஒளி<br>கோழைமிடறாக | நள்ளாறனை நினைத்து மதுரையில் பாடியது. அனலில் ஏடு எரியாமல் இருந்த அற்புதம் | பொது | 1 | 1.தலையே நீ வணங்காய் | திருவங்கமாலை மனித உடல் இறைவனை வணங்கவே | - | - | | - |
| 9. | நட்டபாடை | 1.30-2.45 | நாட்டை கம்பீரநாட்டை | வன்மை | 1 | அச்சம்<br>பெருமிதம்<br>உவகை | 22 | சீர்காழி<br>திருமருகல் / திருச்செங்காட்டங்குடி<br>வேணுபுரம் | தோடுடைய செவியன்<br>அங்கமும் வேதமும்<br>வண்டார்குழல் அரிவை | ஞானப்பால் அருந்தியபின் பாடிய முதற்பதிகம் | திருக்கோழம்பம் | | 1. நம்கடம்பனை<br>2. சமரசூரபன்மா | அம்மை, முருகன் குறிப்புகள் | திருக்கேதாரம்<br>திருச்சுழியல் | வாழ்வாவது மாயம்<br>ஊனாய்உயிர் புகலாய் | 5 | காளத்தியில் இருந்துகொண்டே கேதார நாதரை எண்ணிப்பாடியது |
| 10. | பழம் பஞ்சுரம் | 2.45-4.00 | சங்கராபரணம் | வன்மை | 3 | உவகை<br>மருட்கை<br>பெருமிதம் | 17 | திருஆலவாய்<br>கழுமலம் | வேத வேள்வியை நிந்தனை செய்துழல்<br>உற்றுமை சேர்வது | இறைவன் அருள் பெற்று சமணர்களை வென்றது | பொது | 2 | 1.பருவரை ஒன்று<br>2. பற்றார்சேர் பழம்பதி | 1.இறைவனின் 11 திருவிளையாடல்களைக் குறிக்கும் பதிகம்<br>2. பார்பரவும் பாபநாசம் | 1. திருக்கொடுமுடி<br>2. திருவாரூர் | மற்றுப்பற்றெனக்கு<br>ஏழிசையாய் இசைப்பயனாய் | 7 | நமச்சிவாயத் திருப்பதிகம் |
| 11. | காந்தார பஞ்சமம் | 4.00-5.15 | கேதார கௌளை | | 3 | மருட்கை<br>அச்சம்<br>அவலம் | 23 | 1.திருவாவடுதுறை<br>2. திருக்கொள்ளம்பூதூர்<br>பொது | இடரினும் தளரினும்<br>கொட்டமே கமழும்<br>துஞ்சலும் துஞ்சலிலாத | தந்தை வேள்விக்குப் பொற்காசு பெற்றது<br>கோலின்றி ஓடம் செலுத்தியது<br>ஐந்தெழுத்து | 1.திருவதிகை<br>2.பொது | 2 | 1. முளைக்கதிர் இளம்பிறை<br>2. சொற்றுணை வேதியன் | நமச்சிவாயப் பதிகம் | திருவையாறு | பரவும் பரிசொன்று | 1 | காவிரிவெள்ளம் வழிவிட்ட பதிகம் |
| 12. | பஞ்சமம் | 5.15-6.30 | ஆகிரி | மென்மை | 3 | உவகை<br>மருட்கை | 11 | திருச்செங்காட்டங்குடி | பைங்கோட்டுமலர் | சிறுத்தொண்டரைப் போற்றி மகிழ்ந்தது | - | | - | - | திருநொடித்தான்மலை | தான்எனைமுன் படைத்தான் | 5 | வெள்ளையானை மீது ஏறி கயிலை போனபோது பாடியது |
| 13. | தக்கராகம் | மாலைப் பண்கள்<br>6.30-7.30 | காம்போதி | வன்மை | 1 | உவகை | 24 | திருக்கோலக்கா<br>திருவிடைமருதூர்<br>திருப்பாச்சிலாச்சிராமம் | மடையில்வாளை பாய<br>தடங்கொண்ட தாமரை<br>துணிவளர் திங்கள் | பொற்றாளம் பெற்ற பதிகம் | - | | - | - | திருக்கலயநல்லூர் | குரும்பைமுலை மலர்க்குழலி | 4 | |

| பண் விபரங்கள் | | | | | | | | திருஞானசம்பந்தர் - திருமுறை 1, 2, 3 | | | திருநாவுக்கரசர் - திருமுறை 4, 5, 6 | | | | சுந்தரர் - திருமுறை 7 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | பண்கள் | உகந்த காலம் | இன்றைய ராகம் | தன்மை | திருமுறை எண் | மெய்ப்பாடு | பதிகங்கள் | தலம் | பாடல் தொடக்கம் | பண்ணுக்காக/பண்ணினால் விளைந்த அற்புதம் /அருஞ்செயல் | தலம் | பதிகங்கள் | பதிகம்/பாடல் முதல்வரி | அற்புதம்/ அருஞ்செயல் | தலம் | பதிகம்/பாடல் முதல்வரி | பதிகங்கள் | அற்புதம்/ அருஞ்செயல் |
| 14. | பழந்தக்க ராகம் | 7.30-9.00 | சுத்தசாவேரி (ஆரபி) | - | 1 | பெருமிதம் மருட்கை | 16 | திருநள்ளாறு | போகமார்த்த பூண் முலையாள் | மதுரையில் கயிறு சார்த்திப் பார்த்த பதிகம் அனல் வாதத்தில் வெற்றி; பச்சைப் பதிகம் | திருப்பழனம் | 2 | மண்பொருந்தி வாழ்பவருக்கும் | அப்பூதியடிகள் மகனை உயிர்ப்பித்தபின் பாடியது | | - | | - |
| | | | | | | | | திருநெடுங்களம் | மறையுடையாய் | | | | | | | | | |
| 15 | சீகாமரம் | 9.00-10.30 | நாத நாமக்கிரியை | வன்மை | 2 | அவலம் மருட்கை | 14 | திருவெண்காடு<br>திருமயிலை | பேயடையாப் பிரிவெய்தும் | பிள்ளைப்பேறு தரும் பதிகம்<br>மெய்கண்டாரைத் தந்த பதிகம் | திருவாரூர்<br>திருவாரூர் | 2 | 1.சூலப்படையானை<br>2.காண்டலே கருத்தாய் | | 1. திருப்பனையூர் | 1. மாடமாளிகை | 4 | சிவபெருமானின் நடனக்காட்சி கண்ட தலம் |
| | | | | | | | | | மட்டிட்ட புன்னை | பூம்பாவையை எழுப்பிய அற்புதம்<br>(எலும்பைப் பெண்ணாக்கியது) | | | | | 2. திருப்பனங்காட்டூர் | 2.விடையின்மேல் வருவானை | | |
| | | | | | | | | | | | | | | | 3. திருவீழிமிழலை | 3.பரந்த பாரிடம் | | |
| | | | | | | | | | | | | | | | 4. திருவெண்பாக்கம் | 4.இடையறியேன் தலையறியேன் | | |
| 16. | கொல்லி | 10.30-12 | நவரோசு | வன்மை | 3 | அவலம் மருட்கை | 18 | திருக்கழுமலம் | மண்ணில் நல்ல வண்ணம் | ஞானப்பால் அளித்தபின்<br>பிரமபுரத்திறைவனே எனக்கூறுவது | திருஅதிகை | 5 | 1. கூற்றாயினவாறு | 1. சூலை நோயால் தடுத்தாட் கொண்டபின் பாடிய பதிகம் | திருக்கோடிக்கா | கடிதாய்க் கடற்காற்று | 7 | தனிமையில் இருந்த இறைவனுக்கு இணங்கியது |
| | | | | | | | | | | | | | 2. சலம் பூவொடு | 2.தமிழிசை நாட்டம் | திருப்புகலூர் | தம்மையே புகழ்ந்து | | தூக்கத்தில் செங்கல்<br>பொன்னான அற்புதம். |
| | | | | | | | | திருஆலவாய் | மானினேர் | தம்மை எளியவன் என நினைக்க வேண்டா | கோயில் | | 3. பத்தனாய்ப் பாட மாட்டேன் | 3.இறைவனின் ஆடும் திருக்கோலப் புனைவுகள் | | | | |
| 17. | கொல்லிக் கௌவாணம் | 10.30-12 | நவரோசு | வன்மை | 3 | மருட்கை இளிவரல் அவலம் | 1 | திருச்சிற்றேமம் | நிறைவெண் திங்கள் | - | - | | - | - | திருவதிகை | தம்மானை அறியாத | 9 | இறைவனின் திருவடி தீட்சை பெற்றபின் பாடியது |
| | | | | | | | | | | | | | | | பொது | தில்லை வாழந்தணர் | | இறைவன் தந்த முதலடியுடைய பதிகம் |
| 18. | செவ்வழி | பொது | யதுகுல காம்போதி | வன்மை | 2 | உவகை மருட்கை பெருமிதம் | 10 | திருத்திலதைப்பதி | பொடிகொள் பூசி | - | - | | - | - | - | - | | - |
| | | | | | | | | திருநாகேச்சுரம் | காளமேகந் நிறக்கால | | | | | | | | | |
| 19. | வியாழக் குறிஞ்சி | 12-1.30 | சௌராஷ்டிரம் | - | 1 | மருட்கை | 25 | திருச்செங்கோடு | அவ்வினைக்கு இவ்வினை | திருநீலகண்டப்பதிகம் -சுரம் தீர்த்தது | - | | - | - | - | - | | - |
| | | | | | | | | பொது | வெந்த வெண்ணீறு | | | | | | | | | |
| | | | | | | | | திருக்கழுமலம் | பந்தத்தால் வந்தெப்பால் | திருத்தாளச்சதி | | | | | | | | |
| 20. | மேகராகக் குறிஞ்சி | 1.30-3.00 | நீலாம்பரி | வன்மை | 1 | பெருமிதம் | 7 | 1. திருவையாறு | 1. புலனைந்தும் பொறி கலங்கி | 1.மழைப்பேறு தரும் பதிகம் | - | | - | - | - | - | | - |
| | | | | | | | | 2. திருத்தருமபுரம் | 2. மாதர்மடப் பிடியும் | 2.யாழ்முரி | | | | | | | | |
| 21. | குறிஞ்சி | 3.00-4.30 | ஹரி காம்போதி | வன்மை | 1 | உவகை மருட்கை | 29 | திருவீழிமிழலை | வாசிதீரவே காசுநல்குவீர் | பொற்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்த பதிகம் | திருவாரூர் | 1 | 1. முத்து விதானம்<br>2.துன்பம் நும்மைத் | சம்பந்தரும் அப்பரும் எதிர்கொண்டு மகிழ்தல் திருவாதிரைத் திருவிழாச் சிறப்பு | திருஅவிநாசி | எற்றான் மறக்கேன் | 4 | முதலைவாய்ப் பிள்ளையை மீட்ட பதிகம் |
| | | | | | | | | திருவெங்குரு | விண்ணியல் விமானம் | | | | | | | | | |
| | | | | | | | | கோயில் | செல்வ நெடுமாடஞ் | | | | | | | | | |
| 22. | அந்தாளிக் குறிஞ்சி | விடி காலை 4.30-6 | சாமா | வன்மை | 3 | உவகை மருட்கை பெருமிதம் | 2 | திருநல்லூர்ப் பெருமணம் | அன்புறு சிந்தையராகி | திருமணம் காணவந்த அன்பர்களோடு முத்திப்பேறு | - | | - | - | - | - | | - |
| 23. | செந்துருத்தி | பொது | மத்தியமாவதி | - | - | - | | - | - | - | - | | - | - | திருவாரூர் | மீளா அடிமைக்கே | 1 | இரண்டாவது கண் வேண்டிப் பாடியது |
| | திருநேரிசை | | | | 4 | | | | | | பாதிரிப் புலியூர் | 58 | கருவாய்க் கிடந்துன் | | | | | |
| | திருவிருத்தம் | | | | 4 | | | | | | திருவையாறு | 34 | களித்துக் கலந்ததொர் | | | | | |
| | திருக்குறுந்தொகை | | | | 5 | | | | | | கோயில் | 100 | பனைக்கை மும்மத வேழம் - வேத நாயகன் - மாசில் வீணையும் | | | | | |
| | திருத்தாண்டகம் | | | | 6 | | | | | | கோயில் | 99 | அரியானை அந்தணர் | | | | | |

**28.04.2013 ஞாயிறு பிற்பகல் 01.30 - 3.30 — திரு. கு.சுப்ரமணியம், திருப்பரங்குன்றம்**

**எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகம்**

| வ. எண் | தலைப்பு | பாடல் தொடக்கம் | வ.எண் | தலைப்பு | பாடல் தொடக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | சிவபுராணம் | நமச்சிவாய வாழ்க | 9. | திருச்சாழல் | பூசுவதும் வெண்ணீறு |
| 2. | போற்றித் திரு அகவல் | அடிகள் 90-225 | 10. | திருப்பள்ளி எழுச்சி | இன்னிசை வீணையர் |
| 3. | திருச்சதகம் | நாடகத்தால் | 11. | கோயில் திருப்பதிகம் | தந்தது உன்தன்னை |
| 4. | திருச்சதகம் | யானேதும் பிறப்பஞ்சேன் | 12. | கோயில் மூத்த திருப்பதிகம் | உடையாள் உன்தன் நடு இருக்கும் |
| 5. | திருச்சதகம் | வெள்ளம் தாழ் விரிசடை | 13. | அன்னைப்பத்து | வேதமொழியர் வெண்நீற்றர் |
| | திருச்சதகம் | சிந்தனை நின்தனக்கு | 14. | குயிற்பத்து | கீதம் இனியகுயிலே |
| | திருச்சதகம் | புணர்ப்பதொக்க | 15. | பிடித்த பத்து | அம்மையே அப்பா |
| | திருச்சதகம் | பேசப்பட்டேன் | 16. | அச்சப்பத்து | புற்றில்வாழ் அரவும் |
| | திருச்சதகம் | வானநாடரும் | 17. | யாத்திரைப் பத்து | பூவார் சென்னிமன்னன் |
| 6. | திருவம்மானை | விண்ணாளுந் தேவர்க்கு | 18. | திருப்படையாட்சி | கண்களிரண்டும் அவன்கழல் |
| 7. | திருப்பொற்சுண்ணம் | வேதமும் வேள்வியும் | 19. | அச்சோப்பதிகம் | முத்தி நெறிஅறியாத |
| 8 | திருத்தெள்ளேணம் | திருமாலும் பன்றியாய் | | | |

**28.04.2013 ஞாயிறு மாலை 04.00 - 6.00 — திரு. கு.சுப்ரமணியம், திருப்பரங்குன்றம்**

**அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்**

| வ. எண் | தலம் | பாடல் முதல்வரி | வ.எண் | தலம் | பாடல் முதல்வரி |
|---|---|---|---|---|---|
| 1. | | கைத்தல நிறைகனி | 13. | பொது | அதல சேட னாராட அகில மேரு |
| 2. | | முத்தைத்தரு பத்தித் திருநகை | 14. | சிறுவாபுரி | சீதள வாரிஜ பாதா நமோநம |
| 3. | திருவாவினன்குடி | நாத விந்துக லாதீ நமோ நம | 15. | கோடைநகர் | தோழமை கொண்டு |
| 4. | திருவாவினன்குடி | போத கந்தரு கோவே நமோ நம | 16. | திருவண்ணாமலை | இருவினை அஞ்ச |
| 5. | திருவாவினன்குடி | அபகார நிந்தை | 17. | சிதம்பரம் | எழுகடல் மணலை |
| 6. | திருத்தணிகை | சினத்தவர் முடிக்கும் | 18. | சிதம்பரம் | கனகசபை மேவும் |
| 7. | திருத்தணிகை | உய்யஞா னத்துநெறி கைவிடா | 19. | சிதம்பரம் | மனமே உனக்குறுதி |
| 8. | திருக்கழுக்குன்றம் | எழுகுநிறை நாபி அரிபிரமர் | 20. | சிதம்பரம் | அவகுண விரகனை |
| 9. | விநாயகமலை | சரவண ஜாதா நமோநம | 21. | சிதம்பரம் | தாது மாமலர் |
| 10. | செஞ்சேரிமலை | கொண்டாடிக் கொஞ்சு மொழிகொடு | 22. | சிதம்பரம் | ஊனத்தசை |
| 11. | கொங்கணகிரி | ஐங்கரனை யொத்தமன | 23. | எண்கள் | சந்தனந்திமிர்ந்த |
| 12. | பழமுதிர்சோலை | அகரமு மாகி யதிபனு மாகி | 24. | சுவாமிமலை | பாதி மதிநதி போதுமணிசடை |

பக்க வாத்தியங்கள் : **திரு.தி.சுப்பிரமணிய சுவாமி** - வயலின், **திரு.சு.சுரேஷ்குமார்** - மிருதங்கம், **திரு.மு.லெட்சுமணன்** - கடம்